# திருக்குறள் என்றைக்குமான இலக்கியம்

திருக்குறள் பன்னாட்டு மாநாட்டில்
வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு



வெளியீடு:
மாவட்ட நிர்வாகம், விருதுநகர்

| | | | |
|---|---|---|---|
| 75. | மா.முகமது பாரூக் | திருக்குறள் என்றைக்கும் தேவையான இலக்கியம் | 289 |
| 76. | ஆ.பிரபாகரன் | திருக்குறளில் மேலாண்மை கருத்துக்கள் | 295 |
| 77. | இரா. ஜான்சி ராணி | திருக்குறளில் மேலாண்மைச் சிந்தனைகள் | 301 |
| 78. | முனைவர் பா.பொன்னி | பொழுதுகண்டிரங்கலும் காதல்வாழ்வின் விழுமியமும் | 306 |
| 79. | முனைவர். இரா.மூர்த்தி | மனித வாழ்க்கைக்கு வள்ளுவர் வகுத்த மரணமிலாப் பெருவாழ்வு | 311 |
| 80. | இரா.சிவலிங்கம் | வள்ளுவம் காட்டும் வேளாண்மையும் மேலாண்மையும் | 317 |
| 81. | உ.ச.எ.தமிழரசன் | திருக்குறள் காட்டும் நல்லொழுக்கச் சிந்தனைகள் | 322 |
| 82. | கி.கிருபா | திருக்குறளில் காற்று | 326 |
| 83. | சு. பாலகிருஷ்ணன் | திருக்குறளில் வாழ்வியல் விழுமியங்கள் | 330 |
| 84. | முகிலை இராசபாண்டியன் | திருவள்ளுவரும் இடைச்சொல் பயன்பாடும் | 335 |
| 85. | வே.முத்துமாரி | திருக்குறளில் மருத்துவ மேலாண்மை | 340 |
| 86. | முனைவர் சி.தேவி | பேச்சுக்கலைப் பயிற்சியாளன் வள்ளுவன் | 345 |
| 87. | முனைவர் இரா. யசோதா | வள்ளுவர் தேர்ந்தெடுத்த ‘குறள்பா’ | 352 |
| 88. | முனைவர் கி. சுமித்ரா | திருக்குறள் பொருண்மை குறித்து இல்லை திருக்குறள் அகராதிகள் வரலாறு | 358 |
| 89. | முனைவர் கொ.சத்யபாமா | திருக்குறளில் சொல்லறம் | 366 |
| 90. | முனைவர் ச.முத்துச்செல்வம் | வாழ்வை வளப்படுத்தும் வள்ளுவம் | 372 |
| 91. | முனைவர் சி.அற்புதராணி | திருவள்ளுவர் காட்டும் இல்லறம் | 377 |
| 92. | முனைவர் சி.கஸ்தூரி ரெங்காமணி | திருக்குறளும் மருத்துவமும் | 383 |
| 93. | முனைவர் பா.உமா மகேஸ்வரி | மனுவும் திருக்குறளும் காட்டும் போர் முறையும் தூதுவனின் பண்பும் | 386 |
| 94. | முனைவர் ஜெ.அமுதா | திருக்குறளில் நட்பு | 390 |
| 95. | முனைவர் வி. அன்னபாக்கியம் | குடும்பம் கட்டப்பட – குறள் அவசியம் | 395 |
| 96. | முனைவர். த.ராதிகா லட்சுமி | வள்ளுவர் வகுத்த வெற்றிக்கான வழிமுறைகள் | 400 |
| 97. | முனைவர் மா.சந்தனப்பிரியா | திருக்குறளில் தனிமனித ஆளுமைகள் | 408 |
| 98. | முனைவர் இலக்குவன் சொக்கலிங்கம் | திருக்குறள் காட்டும் வாழ்வியல் நீதிகள் | 411 |

# ௯௬. வள்ளுவர் வகுத்த வெற்றிக்கான வழிமுறைகள்

முனைவர். த.ராதிகா லட்சுமி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி - 642001
அலைபேசி எண் -9994961749
மின்னஞ்சல் –radhikalakshmit@gmail.com

**த**மிழுக்குக் கதியான நூல்களுள் ஒன்றான உலகப் பொதுமறை என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாண்புக்குரியது திருக்குறள். இந்நூல் மொழி, இனம், மதம், சமயம் போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி எக்காலத்திற்கும் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து நல்வழிகளையும் எடுத்துரைக்கும் சிறப்புடையது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குறள் வெண்பா யாப்பில் மக்களின் மனதில் அறக்கருத்துகளை அச்சாணியாய்ப் பதியவைக்கும் நோக்கில் எழுந்தது. மேலும் மனிதவள மேம்பாட்டுக்கு அவசியமான அறம், பொருள், இன்பம் என்ற அடிப்படைக் கொள்கைகளை உணர்த்துவதுடன் அவற்றில் உள்ள குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டி மனிதஇனத்தைச் சீர்ப்படுத்தி உயர்த்த முற்படுகின்றது. பொதுவாக மனிதன் தான் செய்யும் செயலில் வெற்றியடைந்து மகிழ்ச்சியை அனுபவிக்கவே விரும்புகிறான். அவன் விருப்பம் நிறைவேற அடிப்படையாக அமைவது அவனது எண்ணங்களாகும். இத்தகைய எண்ணங்களை முறையாக்கி. வலிமைப்படுத்தி, வினைக்கு ஆட்பட்டு வெற்றியடையும் கருத்துகளைத் திருக்குறளின் வாயிலாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**எண்ணம் போல் வாழ்வு :**

ஒரு உயிர் இவ்வுலகில் பிறக்கும்பொழுது விவேகம், உள்ளுணர்வு, எண்ணம், மனோவேகம், ஞாபகங்கள், செயலாற்றும் தன்மை போன்றவற்றை உள்ளடக்கிய உளம்படைத்தாகவே தோன்றுகிறது. உடல் இயங்குவதைப் போலவே உள்ளமும் இயங்குகிறது. உடலும், உள்ளமும் ஒன்றுபட்டு ஒத்தியங்கும் தன்மையுடையன. ஏதேனும் ஒன்றில் எழும் மாற்றம் மற்றொன்றை பாதிக்கும். உடல் மாற்றம் உள்ளத்தைத் தாக்குவதை அனைவரும் அறிவர். அதேபோல் உள்ளநிலை, அதில் ஏற்படும் மாற்றங்கள், எண்ணங்களின் மோதல், உடலின் செயல்களைத் தாக்கி வாழ்க்கையை மாற்றும் விதத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

“நீர்மேல் மிகச் சிறிய பாகமும், நீரினுள் மிகப்பெரும் பாகமுமாகச் சமுத்திரத்தில் மிதந்து செல்லுகின்ற பனிமலையை ஒத்து மனித உள்ளத்தின் கனவுப் பாகம் (Conscious Mind) எஞ்சிய அதீத பாகம் (Unconscious mind) மிகமிகப் பெரிதாகவும் அமைந்துள்ளன என்பதே, இவ்வதீத மனத்துள் மறைந்து உறையும் சிந்தனைகளும் விருப்பு வெறுப்புகளும் கனவு மனத்தையும், உடல்நிலையையும் ஊன்றித் தாக்கி நாம் அறியா விதமாக நம் வாழ்க்கையை ஆளுகின்றன”

(திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு - பதிப்பாசிரியர்.கி.வா.ஜகந்நாதன், ப.எ-120) என்பர். இக்கருத்தின் அடிப்படையில் இருபிரிவாக இயங்கும் உள்ளம் எவ்வளவுக்கு மேம்படுகின்றதோ அவ்வளவுக்கு நம் வாழ்க்கையும் சிறக்கும் என்பது திண்ணம். விருப்பங்கள், உளச்சார்புகள், பற்றுக்கள், இலட்சியங்கள் போன்றவை உள்ளத்தில் உதித்தும், வலிமையில் கூடி குறைந்தும், மறைந்தும், நிறைத்தும் மனிதத்தன்மையின் பேரம்சமாக விளங்குகின்றன. மனிதவாழ்க்கை சீரும், சிறப்பும் எய்தவேண்டுமெனில் இலட்சியத்தை அடைய எண்ணங்களைச் சீர்ப்படுத்த வேண்டியதன் அவசியத்தைத் திருவள்ளுவர் திருக்குறளில் எடுத்துரைத்துள்ள தன்மை அளப்பதற்குரியது.

**உயர்கனவு:**

ஒருவன் எதை அடைய விரும்புகிறானோ அதை அவன் அடைந்தால் மட்டுமே வெற்றி பெற்றதாகக் கருதுவான். அதனால் வெற்றிபெற விரும்பும் மனிதன் ஏதாவது ஒன்றை நினைத்து அதையடைய முயற்சித்தல் வேண்டும். அந்த விருப்பத்தை, கனவை, இலட்சியத்தை நியமிப்பதன் வாயிலாகவே அவன் வெற்றியடையமுடியும்.“உன்னுடைய கல்லறையில் என்ன பொறிக்கப்படவேண்டும் என்பதை முடிவு செய்துகொள்” (Steven kavi- The 7 Habits of Highly Effective People) என்று ஸ்டீவென் கவ்வியின் கருத்து கூர்ந்து நோக்கத்தக்கது. உயிரோடு இருக்கும் காலத்தில் மனிதன் செய்யும் அளப்பதற்கரிய செயலே அவன் புவியில் நிலைபெறுவதற்குக் காரணமாகும். எண்ணமே செயலாய் வடிவெடுப்பதால் எண்ணம் சிறந்ததாய் இருத்தல் வேண்டும். வள்ளுவர் கனவு அல்லது இலட்சியம் என்ற சொல்லைக் கையாளாமல் எண்ணம் உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்பதை உவமைப்படுத்தி விளக்குவதனை,

“வெள்ளத் தனையமலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையதுயர்வு” (கு.எண்-595)

என்ற குறள் விளக்குகிறது. ஒரு நீர்நிலையில் உள்ள பூக்களுடைய தாள்களின் நீளம் அங்குள்ள நீரின் ஆழத்தைப் பொறுத்தது. நீரின் ஆழம் அதிகமாக, அதிகமாக தாளின் நீளமும் அதிகரித்து நீண்டு கொண்டே இருக்கும். அதுபோல் மனிதர்களின் உள்ளத்தில் உள்ள எண்ணம் உயர்ந்ததாக இருப்பின் அவர்கள் அடையும் வெற்றியின் அளவும் உயர்ந்ததாக இருக்கும் என்று இக்குறள் கனவின் உயரத்தை எடுத்துரைக்கிறது.

1962 ஆம் ஆண்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த ஜான்கென்னடி ஒரு பள்ளி நிகழ்வில் மாணவர்களிடம் ‘நீங்கள் எதிர்காலத்தில் என்ன செய்ய விரும்புகிறீர்கள்?” என்று கேட்டார். மாணவர்கள் ஆசிரியர், மருத்துவர், பொறியாளர், விஞ்ஞானி என்று பல பணிகளை உரைக்க ஒரு மாணவன், ‘உங்களைப் போல நாட்டின் குடியரசுத்தலைவராகப் போகிறேன்’ என்றான். வில்லியம் கிளிண்டனாகிய அம்மாணவன் தன் கனவை 1992 ஆம் ஆண்டு குடியரசுத்தலைவராகி நனவாக்கினர்ன். ஒரு மனிதனின் உயர்கனவு உயர்ந்த வெற்றியைத் தரும் என்பதற்கு கிளிண்டன் ஓர் உதாரணமாவார்.

“நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமைப் படைத்தவன் என்று நினைத்தால் நீ வலிமைப்படைத்தவனாகவே ஆவாய். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே” என்ற விவேகானந்தரின் கூற்றையே இக்குறள் பிரதிபலிக்கிறது எனலாம்.

**ஆராய்தலும் இலக்கை நிர்ணயித்தலும்:**

உயர்ந்த எண்ணங்களை நிலைப்படுத்தி, எதிர்கால விளைவுகளைச் சிந்தித்து சீர்ப்படுத்தியபின் இலக்கை நிர்ணயித்தல் வேண்டும். ஒருமனிதன் தான் நினைத்ததைச் சாதிப்பதற்கு சிறிய, சிறிய செயல்களைப் புரியவேண்டும். இச்சிறுசெயல்களே இலக்குகள் ஆகும். இந்த இலக்குகளின் வெற்றியே அவன் இலட்சியத்தை, சாதனையைப் படைக்க வழிகோலுகிறது.

வெற்றி பெறவிரும்பும் ஒருவன் தேர்ந்தெடுத்த வினையை முழுவதுமாக விரும்புதல் அவசியம். சிந்தனை, அறிவு, ஆர்வம் போன்றவற்றோடு வினையைச் செய்தால் வெற்றி கிடைப்பது உறுதி. பலனைக் குறித்து மட்டும் எண்ணாமல் அவ்வினையை எவ்வாறு செய்வது? எத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றுவது? திருத்தத்துடன் எவ்வாறு செய்வது என்பது குறித்துச் சிந்திப்பதும் முக்கியமானது. இதனையே,

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகிவழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்துசெயல்" (கு.எண்-641)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இக்குறள் ஒரு செயலில் இருக்கும் அழிவுக்கூறுகளையும், ஆக்கநுண்மைகளையும். அதன் பயன்களையும் நுணுகி ஆராய்ந்து செயலைத் தொடங்கவேண்டும் எனக் குறிப்பிடுகிறது. ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்தாலோ, செய்யவேண்டிய செயல்களைச் செய்யத் தவறினாலோ தன் இலட்சியத்தை அடையமுடியாது. தேர்ந்தெடுத்த தமது இனத்துடன் ஒரு செயலை ஆராய்ந்து எண்ணிச் செய்கின்றவர்க்கு அடைவதற்கு அரிதான பொருள் எதுவும் இல்லை என்று வள்ளுவர் உரைத்ததில் ஒரு செயலை எத்தகைய நபருடன் இணைந்து செய்யப் போகிறோம் என்பது குறித்தும் ஆராயவேண்டும் என்பது புலனாகின்றது.

**எண்ணத்தில் உறுதியும், தெளிவும்:**

விலங்குக்கும், மனிதனுக்கும் உள்ள தலையாய வேற்றுமைகளுள் ஒன்று எண்ணும் திறன். அஃறிணையான பறவை, விலங்குகளைக் காட்டிலும் பலநூறு மடங்கு அதிக எண்ணுதிறன் உடையவர்கள் மனிதர்களாவர். மனிதர்களின் எண்ணுதிறன் பரந்து விரிந்து ஆழ்ந்து வளரும் தன்மையுடையது.

எண்ணியதை எண்ணியபடி அடைபவர் தங்கள் எண்ணத்தில் உறுதியாக இருப்பவரே என்பதை,

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" (கு.எண்-666)

என்ற குறள் விளக்குகிறது. எண்ணத்தில் உறுதி இல்லையாயின் செயல் நிறைவேறாது. செயலில் முடியாத எண்ணங்கள் விதைக்காத விதைகளே. எனவே விதைக்காத விதையை நம்பி கனியை எதிர்பார்த்தல் முட்டாள்தனம் ஆகும். என்றும் மாறாத நிலையான எண்ணம் தான் வெற்றிக்குத் தொடக்கவிதி.

உள்ளம் விரும்பும் எண்ணத்தைத் தன் அறிவால் அதன் இயல்புகளையும், தன்மைகளையும், செயலின் விளைவால் ஏற்படும் நன்மை, தீமைகளையும் ஆராய்ந்து பார்க்கின்ற தன்மையே எண்ணுதிறனாகும்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு" (கு.எண்-467)

என்ற குறளில் வள்ளுவர் எச்செயலும் தொடங்குவதற்கு முன் மனிதனின் அறிவு முழுமையாக அதில் ஈடுபட்டு ஆராய்ந்து பின்பே செயல்படுத்தவேண்டும் என்று குறிப்பிடுகிறார். எண்ணாமல் ஒரு செயலைத் தொடங்கியபின் தவறாக முடிவதோடு அம்மனிதனுக்கு இழுக்கையும் ஏற்படுத்திவிடும் என்பதையும் வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

"பேதாய் பிழைசெய் தனைபேரு லகின்
மாதா அனை யாளைமனக் கொடுந்
யாதாக நினைத் தனைஎண் ணம்இலாய்
ஆதாரம் நினக் கினியா ருளரோ"

(கம்பராமாயணம், பா.எ-3411)

என்று கம்பராமாயணத்தில் சடாயு உயிர்நீத்தபடலத்தில் ஆராயும் எண்ணமில்லாத இராவணனின் செயல் எடுத்துரைக்கப்படுகிறது. இராவணன் சிந்திக்காமல் செய்த செயலால் இழுக்கடைந்ததை உலகறியும். ஒரு செயலை மேற்கொண்டால் இன்னவகையில் வெற்றிகிட்டும், பயனுடையதாகும் என்று தீர ஆலோசித்து மேற்கொள்ளவேண்டும். அவ்வாறன்றி தனக்குப் பொருந்தாத வினையில் அல்லது ஏனோதானோவென்று ஏதோ ஒரு வினையில் ஈடுபட்டால் அல்லது பிறரின் சூழச்சியால் சிந்திக்காமல் ஈடுபடின் தோல்வியும், இழுக்குமே கிடைக்கும் என்பதற்கு இராவணனே சாட்சியாவான்.

ஒரு சில நேரத்தில் எண்ணத்தால் ஒரு செயலை நாம் தேர்ந்தெடுத்து ஈடுபட்ட நிலையில் நமக்கும், அச்செயலுக்கும் பொருந்தாத தன்மை ஏற்படலாம். அதனால் நம் விருப்பம், ஆர்வம் குறைந்து அச்செயலின் முனைப்பு குறையலாம். ஏன் ஈடுபட்டோம்? என்று வருந்தவும் நேரலாம்.

"எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்" (கு.எண்-514)

என்ற திருக்குறள் இச்சூழலில் செயலையே விட்டு விலகிவிடும் பலரும் இவ்வுலகில் உள்ளார் எனக் கூறுகிறது. அதாவது வினைவேறுபாடு, மனவேறுபாடு தோன்றுவது இயல்பு என்பதை அறிந்து கொண்டு செயல்படு. மேலும் வினைத்தொடங்கும் முன்னே உள்ளத்தை ஆராய்வதன் இன்றியமையாமையை இக்குறள் வலியுறுத்துகிறது.

"உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்" (கு.எண்-540)

என்ற குறள் எண்ணியதை விடாமல் எண்ணி இருக்கப்பெற்றால் எண்ணியதை அடைதல் எளிதாகும். அதாவது எண்ணிய கருத்தில் உறுதியும் அதற்கான திட்டங்களை வகுத்தலும் அவசியமாகும் என்பதைக் குறிப்பிடுகிறது.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" (கு.எண்-596)

என்ற குறளில் எண்ணங்கள் உயர்வாக இருப்பினும் அவ்வெண்ணம் ஊழ்வலியால் ஈடேறாது போக வாய்ப்புண்டு என்பது இயல்பு. அவ்வுயர்வு கைகூடாவிடினும் அந்த எண்ணத்தைக் கைவிடுதல் கூடாது. அதற்கான எடுத்த முயற்சிகள் அடுத்த செயலுக்குப் பாடமாக இருக்கும் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**திட்டமிடுதல்:**

"திட்டமிடத் தவறுபவர்கள் தோல்வி அடைவதற்குத் திட்டமிடுகிறார்கள்" என்ற பெஞ்சமின் பிராங்க்ளின் கூற்று உற்றுநோக்கத்தக்கது. செயல்களில் எதற்கு முன்னுரிமை, வழிமுறை, அணுகுமுறை, காலம் போன்ற பலவற்றையும் சிந்தித்து திட்டமிட்டால் மட்டுமே வெற்றி காணமுடியும். இதனை,

"பொருள்கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்" (கு.எண்-675)

என்ற குறள் விளக்குகிறது. வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தையும் நன்கு ஆராய்ந்தறிந்த பிறகு ஒருவன் தான் கருதிய செயலை செய்யவேண்டும். மாறாக இதில் ஒன்று மாற்றமடைந்தால் கூட அது வெற்றிவாய்ப்பைப் பாதிக்கும். இக்குறளில் பொருள் என்னும் சொல்லை நோக்கும் போது 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு' என்றும், ' செய்க பொருளை' என்று வள்ளுவர் பொருளின் இன்றிமையாமையை வலியுறுத்துவதோடு ஒப்பிடத்தக்கது.

"பொருள் என்பதை ஆங்கிலத்தில் உள்ள 'resources' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லாகக் கருதினால் நிலவளம் (land), மனிதவளம் (labour), மூலதனம் (Capital) ஆகியவை பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையானவை என்று பொருளாதாரத்துறையின் தந்தை என்று கருதப்படும் ஆடம்ஸ்மித் என்பவர் கூறிய பொருளாதாரக் கொள்கைக்கும் வள்ளுவரின் கருத்துக்கும் ஒற்றுமை இருப்பதைக் காணலாம்"(வாழ்க்கையில் வெற்றிக்கு வள்ளுவர் காட்டும் வழி - முனைவர் பிரபாகரன்) என்ற முனைவர் பிரபாகரனின் கருத்து குறிப்பிடத்தக்கது. எச்செயலுக்கும் தேவையான கருவிகள் இருப்பது அவசியம். அதனோடு தன் வலிமையைக் குறித்துச் சிந்தித்தலும் வேண்டும் என்பதை,

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" (கு.எண்-471)

என்ற குறள் எடுத்துரைக்கிறது. ஒருவன் தான் செய்யக் கருதிய வினைக்குத் தேவையான வலிமை, தனக்குப் போட்டியாக உள்ளவர்களின் வலிமை மேலும் தனக்குத் துணையாக இருப்பவர்களின் வலிமை என மூன்றையும் ஆராய்ந்த பின்னரே செயலைச் செய்யத் தொடங்கவேண்டும். ஒருமரக்கொம்பின் நுனியில் ஏறியவர் ஊக்கமிகுதியால் மேலும் ஏறினால் அஃது அவருடைய உயிருக்கே துன்பத்தை ஏற்படுத்தும். எனவே வலிமையறிதல் அவசியமாகும். இன்றைய உலகில் பல பெரியநிறுவனங்கள் தங்கள் திட்டங்களைப் புதிதாகத் தொடங்குவதற்குமுன் SWOT Analysis நடத்துகிறது. இதில் சாதகமாக முடிவு வந்தால் மட்டுமே திட்டத்தைத் தொடங்குதல் அல்லது கைவிடுதலை நாம் கண்கூடாகப் பார்ப்பதன் வாயிலாக வள்ளுவர் காட்டும் வெற்றிக்கான வழியை அறியமுடிகிறது.

**காலமறிதல்:**

ஒரு வினையைத் தொடங்குவதற்கு முன் திட்டமிடுவதில் வலியறிதலைப் போல காலமறிதலும் முதன்மையானது. 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்ற பழமொழயை ஒத்து செய்யும் வினைக்குத் தகுந்த காலத்தை ஆராயவேண்டும். இதனை,

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது" (கு.எண்-481)

என்ற குறள் விளக்குகிறது. காக்கையை விட வலிமையான பறவை கூகை. இருப்பினும் கூகைக்குப் பகலில் கண் தெரியாததால் அந்நேரத்தில் காக்கையால் கூகையையும் வெல்லமுடியும். அதுபோல தமது பகைவனை வெற்றிபெற விரும்பும் அரசன் காலம் பார்த்துப் போரிடவேண்டும் என வள்ளுவர் வலியுறுத்துகிறார். இக்கருத்து அரசனுக்கு மட்டுமல்ல அனைத்து மனிதருக்கும் பொருந்தும். மற்றொரு திருக்குறளில் நீர்நிலையில் ஒரே இடத்தில் நிற்கும் கொக்கு, மீன் தன்னருகே வந்தவுடன் தன் அலகால் கொத்திக் கவ்வுவதைப் போல ஒரு மனிதன் எந்தவொரு செயலைச் செய்யும்போதும் உரிய காலத்தில் செய்ய, வெற்றி கிடைப்பது உறுதி என எடுத்துரைக்கிறது.

இடமறிதல்:

ஒரு வினைக்குத் திட்டமிடும் போது பொருள், கருவி, வலியறிதல், காலமறிதல் போன்றவற்றைக் குறித்துச் சிந்திப்பது போல இடமறிதலும் இன்றிமையாதது. இதனையே,

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்" (கு.எண் - 484)

என்ற குறளில் வள்ளுவர் குறிப்பிடுகிறார். பகைவனை எதிர்த்துப் போருக்குச் செல்லும்போது எவ்விடத்தில் அப்பகைவன் வலிமை குன்றியவனாக இருப்பானோ அங்கு அவனை எதிர்த்தலே வெற்றிக்கு வழிவகுக்கும். ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு மூலப்பொருட்கள், தொழிலாளர்கள், அரசுச் சலுகைகள். விற்பனையாளர்கள், பொருளை வாங்குபவர்கள் போன்றவற்றை இடத்திற்கான தேவையைக் கருதி முடிவுசெய்தலே வெற்றியைத் தருவிக்கும். இடமறிதலுக்கு திருக்குறளில் வள்ளுவர் கீழ்க்காணும் உவமையைக் கையாண்டுள்ளார்.

"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு" (கு.எண்-500)

என்ற குறளில் வேலையுடைய படைவீரர்களைத் தன் தந்தத்தால் குத்திச் சுமந்து வரும் யானையின் கால்கள் சேற்றில் சிக்கினால், நரி கூட அவ்விடத்தைப் பயன்படுத்தி வலிமையுடைய யானையை வென்றுவிடும். அதாவது சேற்றுநிலம் வலிமை குன்றிய நரிக்குச் சாதகமாக, வலிமையுடைய யானைக்குப் பாதகமாக அமையும். இதைக் கருத்திற்கொண்டு இடத்தை ஆராய்தல் அவசியம் என்ற கருத்தினை வள்ளுவர் வழங்குகிறார்.

ஒரு இலட்சியத்தை அடையப் பல செயல்களைப் புரியவேண்டும். அச்செயல்களில் முதன்மையானது எது? எதற்கு பின் எச்செயலைச் செய்யவேண்டும் என்பதையும் நியமிக்க வேண்டும். ஒரு செயலைக் காலம் தாழ்த்திச் செய்வதால் எப்பயனும் இல்லை.

**செயல்படுத்தல்:**

உயர்ந்த கனவை எண்ணுதல், அக்கனவை ஆராய்தல், திட்டமிடுதல் போன்றவை இன்றிமையாதது. ஆனால் இவை மட்டுமே வெற்றியைத் தராது. கனவை நனவாக்க செயலில் விடாமுயற்சியோடு காலம் தாழ்த்தாமல் ஈடுபடுதல் மிக முக்கியம்.இதனை வள்ளுவர்,

"சூழ்ச்சி முடிவு துணி எய்தல் அத்துணிவு

தாழ்ச்சியுள் தங்குதல் தீது" (கு.எண்-671)

என்று குறிப்பிடுகிறார். ஒரு செயலின் தொடக்கம் எண்ணம். அடுத்தது ஆராய்ச்சி. மூன்றாம் நிலை அவ்வராய்ச்சியில் எடுத்த முடிவை செயல்படுத்தும் துணிவு. ஆராய்ந்து துணிந்தபின் செயல்படுத்தாமல் காலம் தாழ்த்துவது குற்றமாகும் என்ற கருத்தினை இதன்வழி வள்ளுவர் விளக்குகிறார்.

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்

பெருமை முயற்சி தரும்" (கு.எண்-611)

என்ற குறளில் திட்டங்களில் உள்ள செயல்களை எப்படிச் செய்வது என மலைத்து நிற்காமல் மனம் தளராமல், விடாமுயற்சியோடு பணியாற்றவேண்டும். அம்முயற்சிக்கான பலனாய் பெருமை கிட்டும் என்று குறிப்பிடுகிறார்.

"இசையா தெனினும் இயற்றியோ ராற்றான்

அசையாது நிற்பதாம் ஆண்மை"(நாலடியார்> பா.எ.194)

என்ற நாலடியாரின் இப்பாடல் கருத்து இக்குறளோடு ஒத்தது. மேலும், தெய்வ நம்பிக்கையுடையோர் தெய்வத்தை வணங்கிச் செயலாற்றியும் எண்ணியது போல் வெற்றி கிடைக்காமல் போகலாம். ஆனால் அவரின் முயற்சிக்கேற்ற பலன் அவருக்கே கிடைத்தே ஆகும். ஒரு வினையைச் செய்யும் போது இடையூறுகள் வருவது இயல்பு. இதுவே ஊழ். இந்நிலையிலும் தளர்வில்லாமல் முயற்சிப்பவர் ஊழையும் வெல்லும் ஆற்றலுடையவராவர். 'இடுக்கண் வருங்கால் நகுக' என துன்பத்தையும் எள்ளி நகையாடி வெற்றி பெற முயற்சிக்கவேண்டும் என திருக்குறள் வலியுறுத்துகிறது.

தாமஸ் ஆல்வா எடிசன் பல தோல்விக்குப் பின் மின்விளக்கைக் கண்டுபிடித்தார். முகமது கஜினி பதினெட்டு முறை படையெடுத்து வெற்றிபெற்றார். வெற்றிக்கனியை அடைதல் எளிதன்று. தோல்விகளைக் கண்டு துவளாமல் எடுத்த காரியத்தில் முனைப்போடு விடாமுயற்சியோடு செயல்பட்டு வெற்றிகண்ட மனிதர்களை நம் வாழ்வின் முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும். முயற்சியில் முடியாத வினையில்லை எண்பதே உண்மை.

**வெற்றியைப் பகிர்தல்:**

மனிதர்கள் அனைவரும் ஒத்தவர்களே. இக்கருத்தை உணர்ந்த மனிதன் தான் அடைந்த வெற்றியை, வெற்றிக்கான வழியை, தன் அனுபவ அறிவைப் பகிர்வான். அதுவே சமுதாயத்தை முன்னேற்றும்.வள்ளுவர்,

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தந்நோய்போல் போற்றாக் கடை" (கு.எண்-315)

என்ற குறளில் அறிவு இருந்து பயன் என்ன? பிறர்நோயைத் தன் நோய் போல் எண்ணி காக்காதவனுடைய அறிவினால் எப்பயனும் இல்லை. அடுத்தவரின் துன்பத்தைப் போக்கி இன்பமடைவதற்கான வெற்றிக்கான வழியைப் பகிரவேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

"பிறர்நோயும் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடன்"(கலித்தொகை பா.எ-139)

என்று துன்பத்தைக் களையும் அறனையே சான்றோரின் கடமையாக கலித்தொகையும் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கது. கல்வி, தொழில், அறிவியல், புதிய கண்டுபிடிப்புகள், வணிகம், இசை, நடனம் போன்ற பல்வேறு துறைகளிலும் வெற்றிபெற்றோர் துன்பத்தில் இருக்கும் மற்றவருக்கு வழிகாட்டியாய், பாதுகாவலராய்த் திகழவேண்டும். தாம் இன்புறுவதோடு உலகையும் இன்புறச் செய்தலே சிறந்தது எனத் திருக்குறள் அறிவுறுத்துகிறது.

**முடிவுரை:**

'கடுகைத் துளைதேழ் கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்' என்று புகழப்படும் திருக்குறள் வாழ்க்கைக்கான அறிவுரையை எடுத்துரைக்கிறது. ஒரு மனிதன் வாழ்வில் வெற்றிபெறக் கருதினால் ஏதாவது ஒன்றை அடைய விரும்பவேண்டும். அவனுடைய அக்கனவு நனவாக முயலவேண்டும். எண்ணம் போல் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை உயர்ந்த எண்ணமே எனத் திருக்குறள் வலியுறுத்துகிறது. இலட்சியத்தை அடைய ஆக்கநுண்மைகளையும், அழிவுக்கூறுகளையும் ஆராயவேண்டும். வினை விழைவுடன் எண்ணத்தில் உறுதியும், தெளிவும் இருத்தல் அவசியம். பொருள், கருவி, வலிமை, தக்க காலம், உரிய இடம் ஆகிய ஐந்தையும் நன்கு ஆராய்ந்தறிந்த பிறகு, தான் கருதிய செயலைச் செய்யவேண்டும். விடாமுயற்சியுடன் மனம் தளராமல் கடின உழைப்புடன் வினையைச் செய்தால் வெற்றி கிடைப்பது உறுதி. இலட்சியத்தை அடைந்த மனிதன் மற்றவர்களும் தன் இலட்சியத்தை அடைய உதவிசெய்தல் வேண்டும். தனிமனித வெற்றியே சமுதாயத்தின் வெற்றியாக மாற நாடு உயரும் என்பதே வாழ்வின் வெற்றிக்குத் திருக்குறள் காட்டும் வழியாகும்.